பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.41 நாள்:27.03.2018

## பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

-----

பெருநகர சென்னை மாநகராட்சியின் நடப்பு நிதி ஆண்டின் இரண்டாம் அரையாண்டு (II/2017-18) வரும் 31.03.2018 அன்றுடன் முடிவடைய உள்ளதால், பொது மக்கள்/வணிக நிறுவனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி மற்றும் தொழில் வரியினை செலுத்த ஏதுவாக, வருகின்ற 29, 30 மார்ச் 2018 (வியாழன், வெள்ளி) ஆகிய அரசு விடுமுறை தினங்களிலும் மற்றும் அரையாண்டின் இறுதி நாளான 31 மார்ச் 2018 (சனிக் கிழமை) அன்றைய தினமும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசு இ-சேவை மையங்களில் வரி வசூல் மற்றும் உரிமம் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே, இவ்வாய்ப்பினை பொது மக்கள்/வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.